بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *06/06/2025* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ குத்பா**

# எதிரிகளின் ஆட்சேபனைகளுக்கு பதில் கொடுக்கும்போது, சமூக ஊடகத்தை சரியாகப் பயன்படுத்துவது தொடர்பாக பொன்னான அறிவுரைகள்

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾

اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

இன்றைய நாள்களில் சமூக ஊடகத்தின் பலன் இருக்கின்ற, அதிலிருந்து பயனபெறப்படுகின்ற அதே வேளையில், வேதனை தரும் சில விஷயங்களும் அதில் பேசப்படுகின்றன. இதிலிருந்து பயனடைந்தவாறே இன்றைய நாள்களில் எதிரிகள் அஹ்மதிய்யா ஜமாஅத்துக்கு எதிராக எல்லைகடந்த அபத்தமான பேச்சுக்களைப் பேசுகிறார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு எதிராக எப்படிப்பட்ட பொய்களையும், அசுத்தங்களையும் பிதற்றுகிறார்கள் என்றால், அவற்றைக் கேட்பதனால் அஹ்மதியின் மனம் நொந்து போகிறது.

பிறகு, எதிர் நடவடிக்கையாக சில அஹ்மதிகளும் இவற்றிற்குத் தவறான விதத்தில் பதில் கொடுத்து விடுகிறார்கள். அவர்களுடைய நிய்யத் தூய்மையானதாக இருந்தாலுமே, சிலவேளை, தவறான பொருள் சூட்ட முடிந்த சொற்கள் வந்து விடுகின்றன. இது நம்முடைய வழிமுறையல்ல. இதிலிருந்து ஓர் அஹ்மதி தவிர்ந்திருக்க வேண்டும். தவறான சொற்களைப் பயன்படுத்துவதோ அல்லது ஏதாவதொரு வகையில் யாரையாவது இழிவுபடுத்துவதற்குக் காரணமாக அமைகின்ற அத்தகைய சொற்களை அறியாமையில் நம்முடைய நாவில் கொண்டு வருவதோ நம்முடைய பணி கிடையாது. பிறகு, அதிலிருந்து பயனடைந்தவாறு எதிரிகள் நாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அல்லது சஹாபா பெருமக்களை (ரிஸ்வானுல்லாஹி அலைஹிம் அஜ்மயீன்) இழிவுபடுத்தக்கூடியவர்கள் என்று கூறிக் கொண்டே இருப்பதற்கு நாம் வழிவகுத்து விடக்கூடாது. நவூதுபில்லாஹ்!

ஆனால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கும், சஹாபா பெருமக்களுக்கும் நம்முடைய உள்ளங்களில் இருக்கின்ற உயர்ப்படித்தரத்தின் கோடியில் ஒரு பங்குகூட அதைப் பற்றி அந்த மக்களிடம் புரிதலும் உணர்தலும் இல்லை. நம்முடைய அனைத்துமே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது அர்ப்பணம்! அன்னார்தான் அல்லாஹ்வுக்கு அன்பிற்குரியவரும் இறுதி நபியுமான அந்த ஃஹாத்தமுல் அம்பியா ஆவார்கள்.

அன்னாருடைய தோழர்களை, சஹாபா பெருமக்களைப் பற்றியோ ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எண்ணற்ற இடங்களில் எந்தச் சொற்களைக் எடுத்துக் கூறியுள்ளார்கள் என்றால், எந்த விஷயங்களைக் கூறியுள்ளார்கள் என்றால், அவை நம் எதிரிகள் பேசுபவற்றில் (உள்ள) அவர்களின் சிந்தனைக்கும் அப்பாற்பட்டவையாகும்.

எனவே, மாநபி (ஸல்) அவர்களின் உயர்ப்படித்தரம் மட்டுமே நம்முடைய உள்ளங்களில் இல்லை. இதுவோ இருக்கத்தான் செய்கிறது. இது வரையோ எவரும் சென்றடையவே முடியாது. அன்னாருடைய சஹாபா பெருமக்களுக்கும் நம்முடைய உள்ளங்களில் மிகப் பெரும் உயர்ப்படித்தரம் உள்ளது. ஒவ்வோர் அஹ்மதியும் இந்த விஷயத்தை முன்னிறுத்த வேண்டும். தவறான தாக்கம் உருவாகின்ற அல்லது தவறான தாக்கம் உருவாவதற்கு ஏதாவது ஒரு விதத்தில் வாய்ப்பு இருக்கின்ற இத்தகைய விஷயங்களைப் பேசுவதை விட்டும் ஒவ்வோர் அஹ்மதியும் தவிர்ந்திருக்க வேண்டும்.

சில அஹ்மதிகள், 'இந்த பதிலைக் கொடுத்து நாம் பெரும் தன்மானத்தை வெளிப்படுத்தியுள்ளோம்' என்று நினைக்கிறார்கள். அவர்களிடம் கேட்கும்போது இதுவே அவர்களுடைய பதிலாக இருக்கிறது. ஆனால், இந்தப் பெயருக்குத் தன்மானம் கொள்ளுதல் அறிவீனமாகும். ஒருவர் அஹ்மதியாக இருந்து கொண்டு, எந்த வகையிலாவது தவறான பொருள் வருகின்ற விஷயங்களைப் பேசுகிறார் என்றால், அவர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கும் ஜமாஅத்துக்கும் அவப்பெயர் ஏற்படுத்துபவராக இருக்கிறார்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** நீங்கள் பொறுமை காக்க வேண்டும். எப்பொழுதும் பொறுமையை வெளிப்படுத்த வேண்டும். பிறிதோரிடத்தில் ஹுஸூர் (அலை) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: இந்த மக்கள் என்னை ஏசுகிறார்கள். ஆனால், நான் அவர்களின் ஏச்சுக்களைப் பொருட்படுத்துவதில்லை. அவற்றை நினைத்து கவலை கொள்வதுமில்லை. ஏனென்றால், அவர்கள் (சான்றுகளுடன் பதில் அளித்தல் எனும்) அந்த இடத்தை விட்டும் உதவியற்றவர்களாக ஆகி விட்டார்கள். அவர்கள் ஏசி பேசாமல் அவர்களால் தங்களுடைய இந்த ஆதரவற்ற நிலையை, இயலாமையை மறைக்க முடியாது. அவர்கள் கீழ்த்தரமான, தரக்குறைவான ஆயுதத்தைப் பயன்படுத்துகிறார்கள். ஏனெனில், அவர்களிடம் எந்தச் சான்றும் இல்லை; எந்த பதிலும் இல்லை. எனவே, இந்த மக்கள் ஏசி பேச மட்டும் நினைக்கிறார்கள்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** இவர்கள் காஃபிர் பத்வாக்கள் கொடுக்கட்டும்! பொய்யான வழக்குகள் தொடரட்டும்! பல்வேறு வகையாக இட்டுக்கட்டிக் கூறட்டும், அவதூறும் கூறட்டும்! இவர்கள் தங்களுடைய அனைத்து ஆற்றல்களையும் செயலாற்றச் செய்து என்னை எதிர்க்கட்டும்! பிறகு பார்க்கட்டும், இறுதித் தீர்ப்பு யாருக்கு சாதகமாக இருக்கிறது என்று!

நீங்கள் என்ன முயற்சி செய்ய வேண்டுமோ செய்து கொள்ளுங்கள். ஆனால், அல்லாஹ் என்னுடன் இருக்கிறான். இறுதித் தீர்ப்போ யாருக்கு சாதமாக இருக்கிறது என்பது தென்பட்டு விடும்!

**ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** நான் அவர்களின் ஏச்சுக்களைப் பொருட்படுத்தினால், இறைவன் என்னிடம் ஒப்படைத்த அசல் பணி நின்று போகும். எனவே, அவர்களின் ஏச்சுக்களைப் பொருட்படுத்தாத அதே வேளையில், நான் எனது ஜமாஅத்திற்குக் கூறும் அறிவுரை என்னவென்றால், அவர்கள் அந்த மக்களுடைய ஏச்சுக்களைக் கேட்டு சகித்துக் கொள்வது அவர்களுக்குப் பொருத்தமானதாகும். அவர்கள் ஒருபோதும் ஒருபோதும் ஏச்சுப் பேச்சுக்கு ஏசி பேசி பதில் கூறக்கூடாது. ஏனெனில், இவ்வாறு பரக்கத் சென்று கொண்டே இருக்கிறது. அவர்கள் பொறுமை மற்றும் சகிப்புத்தன்மையின் முன்மாதிரியை வெளிபடுத்த வேண்டும். மேலும், தம்முடைய நல்லொழுக்கத்தைக் காட்ட வேண்டும்.

அறிவுக்கும் ஆவேசத்துக்கும் கடும் பகைமை உள்ளது என்பதை நிச்சயமாக நினைவில் கொள்ளுங்கள். ஆவேசமும் கோபமும் வரும்போது, அறிவு நிலைபெற்றிருக்க முடியாது. ஆனால், எவர் பொறுமைகாத்து, சகிப்புத்தன்மைக்கான முன்மாதிரியைக் காட்டுகிறாரோ அவருக்கு ஓர் ஒளி வழங்கப்படுகிறது. அதன் மூலம் அவரது அறிவு மற்றும் சிந்தனையின் ஆற்றல்களில் ஒரு புதிய வெளிச்சம் பிறக்கிறது. பிறகு, அந்த ஒளியிலிருந்து ஒளி பிறக்கிறது. சினமும், ஆவேசமும் கொள்ளும் நிலையில் உள்ளமும் மூளையும் இருளைடைந்து விடுவனால், இருளிலிருந்து இருள் பிறக்கிறது.

எனவே, இதுநாம் எப்பொழுதும் நினைவில் வைக்க வேண்டிய பாடமாகும். மேலும், சில மக்கள் தாமே தம்மை அறிஞர்களாகக் கருதிக் கொண்டு சமூக ஊடகத்தில் பதில் கூறத் துவங்கிவிடுகிறார்கள். அஹ்மதி அல்லாதவர்களான, பெயருக்கு ஆலிம்களான மக்கள் ஆட்சேபனை செய்கிறார்களே, அந்த ஆட்சேபனைகளுக்கு பதில் கூறத் துவங்கிவிடுகிறார்கள். அவர்கள் இதிலிருந்து தவிர்ந்து கொள்ள வேண்டும்.

பதில் தேட வேண்டுமென்றால், (ஜமாஅத்தின்) ஆலிம்களிடம், ஜமாஅத்தின் இலக்கியங்கள் மூலம் ஜமாஅத் பற்றிய ஆழமான அறிவு கொண்டவர்களிடம் கேட்க வேண்டும். மேலும், அதற்கு எப்படி பதில்கள் அளிக்க வேண்டுமென்றால், அவை உண்மையிலேயே உறுதியானவையாக இருக்க வேண்டும். அந்த மக்களுடைய சான்றுகளை, அவர்களுடைய குற்றச்சாட்டுகளைத் தகர்க்கக்கூடியவையாக இருக்க வேண்டும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் போதனைப்படி - அது உண்மையில், சரியான இஸ்லாமிய போதனையாகும். அதன்படி - அமல் செய்ய வேண்டும். இல்லையென்றால், நீங்களெல்லாம் ஜமாஅத்தில் இருந்து கொண்டு பிறகு ஜமாஅத்துக்கு அவப்பெயர் ஏற்படுத்துபவர்கள் ஆவீர்கள்.

அல்லாஹ் நம்மைத் தீயவர்களின் தீங்கிலிருந்து பாதுகாப்பானாக! பொய்யான தன்மானத்தைக் காட்டுகின்ற, சிலவேளை தேவையில்லாமல் சில சொற்களைப் பயன்படுத்தி குழப்பத்தையும் சச்சரவையும் பரப்புவதற்கு காரணமாக அமைகின்ற மக்களுக்கும் அறிவை வழங்குவானாக!

நாம் சமூக ஊடகத்தில் அந்த பதில்களை வழங்குவதற்குப் பதிலாக, அல்லாஹ்வின் பக்கம் குனிந்தால், நம்முடைய தொழுகைகளை நிறுத்தி நிதானமாக நிறைவேற்றினால், அல்லாஹ்வின் தன்மானம் விரைவாகப் பொங்கி எழுகின்ற வகையிலான வேதனையை நம்முடைய சஜ்தாக்களில் உருவாக்கினால், பிறகு, இந்த மக்கள் பதில்கூறுவதனால் பெற விரும்புகின்ற அந்த விளைவுகளை விடச் சிறந்த விளைவுகளை, நம்மால் மிக விரைவாகப் பெற முடியும். எனவே, ‘அஹ்மதி இப்படிக் கூறி விட்டார்; அப்படிக் கூறுவிட்டார்’ என்ற தேவையில்லாத வாய்ப்பை எதிரிகளுக்குத் தருகின்ற அத்தகைய விஷயங்களை ஒருபோதும் பேசக்கூடாது. ஒவ்வோர் அஹ்மதியும் இந்த விஷயத்தை விட்டும் தவிர்ந்திருக்க வேண்டும்.

நம்முடைய ஒழுக்கங்கள் மிகவும் உயர்வானவையாக, மேலானவையாகம் இருக்க வேண்டும். எவருடைய ஒழுக்கங்கள் உயர்ந்தவையில்லையோ அவர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் பைஅத் செய்ததற்கான உரிமையை நிறைவேற்றவில்லை. எனவே, நாம் நம்மை ஆய்வு செய்ய வேண்டும். ஒவ்வொருவரும் தம்மை ஆய்வு செய்திடுங்கள்! சிந்தியுங்கள்! தவறான வகை பதில்கள் அளிப்பதற்குப் பதிலாக துஆக்களின் பக்கம் கவனம் செலுத்துங்கள். அல்லாஹ் நம் அனைவருக்கும் அதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக! எதிரிகளின் தீங்கினை அவர்கள் மீதே திருப்பிடுவானாக! அதிலிருந்து (நம்மைக்) காப்பாற்றுவானாக!

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)